மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19 ஆம் நாள் புதன்கிழமை
இ.ம.எண்.13/2025
அ.வ.எண்.49/2010

K.R.மணி ... மனுதாரர்/2ம் பிரதிவாதி

/எதிராக/

1. செங்கோட கவுண்டர்
2. ராமசாமி (இறந்துவிட்டார்)
3. ராமாயி ...எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு கடந்த 01.02.2025 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.L.கணபதிசுப்ரமணியன் அவர்கள் ஆஜராகியும், 1, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.M.C.பெரியசாமி அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் இறந்தவராகவும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17, 18 மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுவில் கண்டுள்ளவாறு பதிலுரையில் திருத்தங்கள் செய்ய அனுமதியளிக்க உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

<u>1) மனுவின் சுருக்கம்</u> : –

எதிர்மனுதாரர்கள்/வாதிகள், மனுதாரர்/2ம்பிரதிவாதி மற்றும் இதர பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை, விளைவுறு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, வாதிகள் தரப்பு விசாரணை முடிந்து மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்கு வாய்தா போடப்பட்டிருக்கிறது. மேற்படி சாட்சியம் தயார்

செய்யும்போது மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரையில் பத்தி 11ல் செல்லப்பகவுண்டர், த/பெ.நாச்சப்பகவுண்டருக்கு திருமணமாகவில்லை என்பதற்கு பதிலாக நாச்சப்பகவுண்டர், த/பெ.செல்லப்பகவுண்டர் என தவறாகவும், அடுத்த வரியில் சின்னப்பகவுண்டருக்கு கிரயம் செய்தார்கள் என்பதற்கு பதிலாக பழனிசாமிக்கு கிரயம் செய்தார் என்று தவறாகவும், பத்தி 12ல் ராமசாமி குடும்பத்தை விட்டு சென்றார் என்பதற்கு பதிலாக (2ம் பிரதிவாதி) குடும்பத்தை விட்டு சென்றுவிட்டார் என்று தவறாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது தெரியவந்தது. ஆவணங்கள் சரியாக ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் தட்டச்சு செய்யும்போது மேற்படி பிழைகள் ஏற்பட்டுள்ளது. இம்மனுவை அனுமதிப்பதால் தாவா பிராதில் எந்தவொரு மாற்றமும் ஏற்படுவதில்லை. அனுமதிக்காவிடில் மேற்படி சங்கதிகள் பத்திரங்களுக்கு எதிராக போய்விடும். எனவே மனுவில் கண்டுள்ளவாறு பதிலுரையில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ள உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

<u>2) 1ம் எதிர்மனுதாரால் தாக்கல் செய்யப்பட்டு, 3ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

(i) மனு பொய்யானது, சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் பொய் சங்கதிகளை முன்னிறுத்தி இம்மனுவை தாக்ல் செய்துள்ளார். மேற்படி மனுவானது வழக்கு விசாரணை ஆரம்பித்த பின்பு தாக்கல் செய்யப்பட்டதால் இம்மனு சட்டப்படி நிலைக்கதக்கதல்ல. மேற்படி திருத்தப்பாடுகள் சட்டப்படி ஏற்க முடியாத ஒன்று மற்றும் பதிலுரை சங்கதியை நீக்கிட கோரிய திருத்தப்பாடானது தட்டச்சு பிழையின் வகைப்பாட்டின்கீழ் வராது. மேலும் இம்மனு பிரமாணப்பத்திரிக்கையின் குறுந்தலைப்பில் செங்கோடகவுண்டர் வகையறா 2 மற்றும் 3 பிரதிவாதிகள் என்று வேண்டுமென்றே தவறுதலாக மனுதாரர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ii) உண்மையில் செங்கோடகவுண்டர் வகையறா ஆனவர்கள் இவ்வழக்கின் 2 மற்றும் 3 வாதிகள் மட்டுமே ஆவர். அதாவது 2 மற்றும் 3 வாதிகள் என்பதற்கு பதிலாக 2 மற்றும் 3 பிரதிவாதிகள் என மனு அபிடவிட்டில் தவறாக கூறியுள்ளனர். எனவே இம்மனு விசாரணை ஆரம்பித்த பின்பு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும், வழக்கை

காலதாமதப்படுத்த தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும், தட்டச்சு பிழையின் கீழ் வராது என்பதாலும் இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1, 3 எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

<u>4) பிரச்சினை :-</u>

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

<u>5) பிரச்சினைக்கான தீர்வு:-</u>

(i) மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர்கள்/வாதிகள், மனுதாரர்/2ம்பிரதிவாதி மற்றும் இதர பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை, விளைவுறு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, வாதிகள் தரப்பு விசாரணை முடிந்து மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்கு வாய்தா போடப்பட்டிருக்கிறது என்றும், மேற்படி சாட்சியம் தயார் செய்யும்போது மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரையில் பத்தி 11ல் செல்லப்பகவுண்டர், த/பெ.நாச்சப்பகவுண்டருக்கு திருமணமாகவில்லை என்பதற்கு பதிலாக நாச்சப்பகவுண்டர், த/பெ.செல்லப்பகவுண்டர் என தவறாகவும், அடுத்த வரியில் சின்னப்பகவுண்டருக்கு கிரயம் செய்தார்கள் என்பதற்கு பதிலாக பழனிசாமிக்கு கிரயம் செய்தார் என்று தவறாகவும், பத்தி 12ல் ராமசாமி குடும்பத்தை விட்டு சென்றார் என்பதற்கு பதிலாக (2ம் பிரதிவாதி) குடும்பத்தை விட்டு சென்றுவிட்டார் என்று தவறாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது தெரியவந்தது என்றும், ஆவணங்கள் சரியாக ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது என்றும், ஆனால் தட்டச்சு செய்யும்போது மேற்படி பிழைகள் ஏற்பட்டுள்ளது என்றும், இம்மனுவை அனுமதிப்பதால் தாவா பிராதில் எந்தவொரு மாற்றமும் ஏற்படுவதில்லை என்றும், அனுமதிக்காவிடில் மேற்படி சங்கதிகள் பத்திரங்களுக்கு எதிராக போய்விடும் என்றும், எனவே மனுவில் கண்டுள்ளவாறு பதிலுரையில் உரிய திருத்தங்கள்

மேற்கொள்ள உத்தரவிடக் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(ii) 1, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர் பொய் சங்கதிகளை முன்னிறுத்தி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி மனுவானது வழக்கு விசாரணை ஆரம்பித்த பின்பு தாக்கல் செய்யப்பட்டதால் இம்மனு சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றும், மேற்படி திருத்தப்பாடுகள் சட்டப்படி ஏற்க முடியாத ஒன்று மற்றும் பதிலுரை சங்கதியை நீக்கிட கோரிய திருத்தப்பாடானது தட்டச்சு பிழையின் வகைப்பாட்டின்கீழ் வராது என்றும், மேலும் இம்மனு பிரமாணப்பத்திரிக்கையின் குறுந்தலைப்பில் செங்கோட கவுண்டர் வகையறா 2 மற்றும் 3 பிரதிவாதிகள் என்று வேண்டுமென்றே தவறுதலாக மனுதாரர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(iii) உண்மையில் செங்கோடகவுண்டர் வகையறா ஆனவர்கள் இவ்வழக்கின் 2 மற்றும் 3 வாதிகள் என்றும், அதாவது 2 மற்றும் 3 வாதிகள் என்பதற்கு பதிலாக 2 மற்றும் 3 பிரதிவாதிகள் என மனு அபிடவிட்டில் தவறாக கூறியுள்ளனர் என்றும், எனவே இம்மனு விசாரணை ஆரம்பித்த பின்பு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும், வழக்கை காலதாமதப்படுத்த தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும், தட்டச்சு பிழையின் கீழ் வராது என்பதாலும் இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1, 3 எதிர்மனுதாரர்கள் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(iv) இருதரப்பு வாதுரைகள் மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததின் பேரிலும், இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் மதிப்புமிக்க வாதங்களும் கேட்கப்பட்டதாக கருதப்பட்டதன் பேரிலும், இவ்வழக்கு சங்கதிகளை பரிசீலனை செய்கையில், எதிர்மனுதாரர்கள்/வாதிகள், மனுதாரர்/2ம்பிரதிவாதி மற்றும் இதர பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை, விளைவுறு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. தற்போது மனுதாரர்/2ம் பிரதிவாதி தன் பதிலுரையில் கீழ்கண்ட திருத்தப்பாடுகளை கோருகிறார்.

(v) அவையாவன,

| | |
|---|---|
| (i) | பதிலுரை பத்தி 11ல், 7வது வரியில், **"செல்லப்பகவுண்டர், த/பெ.நாச்சப்பகவுண்டர்"** என்பதற்கு பதிலாக **"நாச்சப்பகவுண்டர், த/பெ.செல்லப்பகவுண்டர்"** என திருத்தம் கோரியும், |
| (ii) | பதிலுரை பத்தி 11ல், **"பழனிசாமி"** என்பதை மாற்றி **"சின்னப்ப கவுண்டர்"** என திருத்தம் கோரியும், |
| (iii) | பதிலுரை பத்தி 12ல், **"2ம் பிரதிவாதி தன் சொத்துக்களை தன் தந்தை ராமசாமி கவுண்டருக்கும், அவரது சகோதரர் மாதேசனுக்கும் விடுதலை செய்து கொடுத்துவிட்டு குடும்பத்தை விட்டு சென்றுவிட்டார்"** என்பதற்கு பதிலாக **"ராமசாமி கவுண்டர் தன் சொத்துக்களை தனது மகன்கள் 2ம் பிரதிவாதி மற்றும் மாதேசன் ஆகியோர்களுக்கும் விடுதலை செய்து கொடுத்துவிட்டு குடும்பத்தை விட்டு சென்றுவிட்டார்"** என திருத்தம் கோரியும், |

இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(vi) இந்நிலையில் மேற்படி திருத்தப்பாடுகள் இவ்வழக்கில் தரப்பினரிடையே உள்ள பிரச்சனையை தீர்மானிக்க அவசியமானதா? என்பதையும், மேற்படி திருத்தப்பாடுகளால் வழக்கின் தன்மை மாறிவிடுமா? என்பதையும், மேற்படி திருத்தப்பாடுகள் புதிய வழக்குமூலத்தை தோற்றுவிக்குமா? என்பதையும் பரிசீலிக்க வேண்டியது அவசியமாகிறது. இந்நிலையில் வாதிகள் தங்கள் வழக்குரை சங்கதிகளிலிருந்து 2ம் பிரதிவாதியின் தந்தையான 1ம் பிரதிவாதியின் பெயர் ராமசாமி கவுண்டர் என்பதையும், 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதியின் தந்தை என்பதையும், குறிப்பிட்டுள்ளது தெரிய வருகிறது. அதேபோல் 2ம் பிரதிவாதி தன் பதிலுரையில் தாவா சொத்துக்கள் ஒரு செல்லப்பகவுண்டர் மகன் நாச்சியப்பகவுண்டருக்கும், 2ம் பிரதிவாதியின் பாட்டனாரான ராமசாமிகவுண்டர் மகன் நாச்சப்பகவுண்டருக்கும் 1946ம் வருட கிரய ஆவணப்படி பாத்தியப்பட்டது என்றும், தன் பாட்டனார் ராமசாமிகவுண்டருக்கு, சின்ன நாச்சியப்பகவுண்டர் என பொதுப்பெயர் உள்ளது எனவும் தெரிவித்துள்ளது தெரிய வருகிறது.

(vii) மேற்படி இரு நபர்களில் நாச்சியப்பகவுண்டர் தந்தை என்றும், அவரது மகன் தான் செல்லப்பகவுண்டர் என்றும், ஆனால் பதிலுரையில் மேற்படி உறவுமுறை மாறி

நாச்சியப்பகவுண்டரை மகனாகவும், செல்லப்பகவுண்டரை தந்தையாகவும் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளதை திருத்தி, செல்லப்பகவுண்டர், த/பெ.நாச்சியப்பகவுண்டர் என பதிலுரையில் திருத்தம் செய்ய கோரியுள்ளதை கருத்தில் கொள்கையில், உறவுமுறை குறித்து வாதிகளே எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்காத நிலையில், மேற்படி திருத்தப்பாடுகள் மேற்கொள்வதால் வாதிகள்/எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(viii) அதேபோல் இரண்டாவது திருத்தப்பாடான **"பழனிசாமி"** என்பதற்கு பதிலாக **"சின்னப்ப கவுண்டர்"** கிரயம் கொடுத்தார்கள் என திருத்தக் கோருவதை பரிசீலனை செய்கையிலும், 3வது திருத்தப்பாடாக **"2ம் பிரதிவாதி தன் சொத்துக்களை தன் தந்தை ராமசாமி கவுண்டருக்கும், அவரது சகோதரர் மாதேசனுக்கும் விடுதலை செய்து கொடுத்துவிட்டு குடும்பத்தை விட்டு சென்றுவிட்டார்"** என்பதற்கு பதிலாக **"ராமசாமி கவுண்டர் தன் சொத்துக்களை தனது மகன்கள் 2ம் பிரதிவாதி மற்றும் மாதேசன் ஆகியோர்களுக்கும் விடுதலை செய்து கொடுத்துவிட்டு குடும்பத்தை விட்டு சென்றுவிட்டார்"** என திருத்த கோருவதை கருத்தில் கொள்கையிலும், மேற்படி பதிலுரையில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளை பொறுத்து 2ம் பிரதிவாதி மற்றும் அவரது தந்தை 1ம் பிரதிவாதி இடையே உள்ள உறவுமுறை குறித்தோ, அல்லது மேற்படி பதிலுரை சங்கதிகளை பொறுத்தோ, வாதிகள் தரப்பில் மேற்படி பதிலுரைக்கு குறிப்பாக மறுப்புரை ஏதும் தாக்கல் செய்யவில்லை என்பதை கருத்தில் கொள்கையிலும், மனுதாரர்கள் கோரும் மேற்படி திருத்தப்பாடுகளால் இவ்வழக்கின் தன்மையிலோ, வழக்குமூலத்திலோ எவ்வித மாற்றங்களும் ஏற்படாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(ix) மேலும் மேற்படி தவறுகள் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்பதும், கவனக்குறைவால் ஏற்பட்டவை என்பதும் தெரியவருகிறது. வழக்கு விசாரணை பகுதி நிறைவுற்ற நிலையிலும், 2ம் பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக வழக்கு நாளிடப்பட்டுள்ள சமயத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை கருத்தில்

கொள்கையில், மேற்படி திருத்தப்பாடுகள் மேற்கொள்ளாவிட்டால் 2ம் எதிர்மனுதாரர் தன் தரப்பு சாட்சியத்தை முன்னிலைப்படுத்துவதிலும், மேற்கொண்டு வழக்கு விசாரணையிலும் தேவையற்ற குழப்பத்தை ஏற்படுத்தும் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(x) மேற்கண்ட விவாதங்களின் அடிப்படையில் மனுதாரர் கோரும் திருத்தப்பாடுகளால் இவ்வழக்கின் தன்மையோ, வழக்குமூலமோ மாறாது என்பதை கருத்தில் கொள்கையில், மேலும் மேற்படி திருத்தப்பாடுகள் ஏற்கனவே வாதிகள் தரப்பில் முன்னிலைப்படுத்தியுள்ள சாட்சியங்களை பொறுத்து எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்பதை கருத்தில் கொள்கையிலும், தற்போது மனுதாரர் மேற்கொள்ள உத்தேசித்துள்ள திருத்தப்பாடானது தரப்பினரிடையே உள்ள உண்மையான பிரச்சனையை தீர்ப்பதற்கு உதவியாக இருக்கும் என்பதாலும், இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இருப்பினும் இவ்வழக்கானது 2010ம் வருடத்தில் தாக்கல் செய்யப்பட்டு, மனுதாரரால் கடந்த 2011ம் வருடத்திலேயே பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், தற்போது வழக்கானது 2ம் பிரதிவாதி தரப்பில் சாட்சியத்திற்காக நாளிடப்பட்டுள்ள நிலையில், தற்போது மனுதாரர் கோரும் திருத்தப்பாடுகளால் வழக்கு விசாரணையில் வாதிகளுக்கு ஏற்பட்ட காலவிரயத்தை ஈடுசெய்யும் வகையில் ரூ.3000/-ஐ செலவுத்தொகையாக எதிர்வரும் 27.02.2025ம் தேதிக்குள் மனுதாரர், எதிர்மனுதாரர்களுக்கு செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, மனுதாரர், எதிர்மனுதாரர்களுக்கு ரூ.3000/-ஐ செலவுத் தொகையாக 27.02.2025ம் தேதிக்குள் செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க 27.02.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு

2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2025.02.19 10:58:34 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2025.02.19 10:58:39 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.